25.06.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை .(ஓ.எஸ்.எண். 93/2023 )செல்வி.பத்மாவதி.

<u>குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரீசு சான்று கோரி தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு வாரீசு சான்று கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாவின் வாரீசு நாங்கள் தான் எனது அப்பாவின் தந்தைக்கு எனது அப்பாவும் எனதுஅப்பாவின் வாரீசு நாங்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாத்தா, பாட்டி எப்போது இறந்தார்கள் என்றால் தாத்தா 2001 லும் பாட்டி 2019 லும் இறந்து போனார்கள்.அவர்களது இறப்பு சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை எப்போது இறந்து போனார் என்றால் 2016 ஆம் ஆண்டு இறந்து போனார். எனது அம்மா உயிருடன் இருக்கிறா என்றால் இருக்கிறார். எனது தாத்தா பாட்டிக்கு எனது அப்பா மட்டும் வாரீசு என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா,பாட்டிக்கு எனது அப்பாதான் வாரீசு என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யாமல் நாங்கள் தான் வாரீசு என்று கோருவது எங்கள் வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிரிவு 80 சி.பி.சி படி தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
25.06.2024.